**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்,**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 11 ஆம் நாள் வியாழக்கிழமை

**இ.ம.எண்.09/2026**

IN

**அசல் வழக்கு எண்.41/2022**

கருத்தப்பாண்டியன் ...மனுதாரர்/1ம் பிரதிவாதி

/எதிர்/

1. அய்யனார் ....1ம் எதிர்மனுதாரர்/1ம் வாதி

2. சார்பதிவாளர் – கரிவலம்வந்தநல்லூர்
3. கருத்தப்பாண்டி
4. முருகேசன்
5. கற்பகவள்ளி
6. சுந்தரத்தாய்
7. விநாயகமூர்த்தி
8. வேல்ச்சாமி
9. முத்துலட்சுமி ....2 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/ 2 முதல் 9 பிரதிவாதிகள்

இம்மனுவானது 02.06.2026 இன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.புஷ்பராஜ் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சுந்தரேசன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.S.ஜெயக்குமார் அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.லெட்சுமணன் அவர்கள் ஆஜராகியும், 2 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ள நிலையிலும், மனு, 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை மற்றும் அசல் வழக்கு கோப்பு, இருதரப்பு

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:34:41 +0530

வாத உரையை கேட்டறிந்தும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

மனுதாரரால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 8 விதி 9-ன் கீழ், மனுதாரர் இத்துடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:-**

மனுதாரர் அசல் வழக்கில் 1ம் பிரதிவாதி என்றும், எதிர்மனுதாரர் மனுதாரர் மீது வலியுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும், இவ்வழக்கில் பிராது தபசில் சொத்துக்கள் சம்பந்தமாக எதிர்மனுதாரர்/வாதி கடந்த 2022ம் ஆண்டு இவ்வழக்கிற்கு முன்பு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில், ரிட் மனு தாக்கல் செய்து மேற்படி ரிட் மனுவானது W.P.(MD)No. 133 of 2022 and W.M.P.(MD) No.97 of 2022 என கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 06.01.2022ல் Admission-ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மேற்படி ரிட் மனுவில் மனுதாரர் தரப்பினராக இருந்தபோதும் மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்படாததால் மனுதாரருக்கு மேற்படி உத்தரவு பற்றி தற்சமயம் தான் தெரியவந்தது என்றும், எனவே, மேற்படி உத்தரவு குறித்து கூடுதல் எதிர்வழக்குரை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், அதேபோல் மனுதாரர் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே அதாவது கடந்த 25.04.2011ம் ஆண்டு 2ம் தபசில் 6ம் அயிட்ட சொத்தை நாராணபுரம் கிராமத்தை சேர்ந்த முருகன் என்பவருக்கு பதிவு கிரைய ஆவணம் மூலம் கிரையம் செய்து கொடுத்துவிட்டதாகவும், அதேபோல் மனுதாரர் தனக்கு பாத்தியப்பட்ட 2ம் தபசில் 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களை மனை பிரிவுகளாக பிரிவினை செய்து ஊராட்சிமன்ற அனுமதி பெற்று மனைபிரிவு மேற்கொள்ளப்பட்டதால் நிபந்தனையின் படி மனுதாரர் மேற்படி மனைபிரிவுகளுக்கு பாதை அமைக்க வேண்டி தமிழக அரசுக்கு மேதகு

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.11 18:34:47 +0530

ஆளுநர் அவர்கள் மூலம் தபசில் புல எண்களில், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இடத்தினை கடந்த 02.03.2011 அன்று பதிவு நன்கொடை ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளதாகவும், எனவே, மேற்படி விபரங்களை இதற்கு முன்பு மனுதாரருக்கு ஆஜரான வழக்கறிஞரிடம் தெரிவிக்க இயலாமல் போய்விட்டது என்றும், எனவே, மேற்படி விபரங்களை தெரிவித்து கூடுதல் எதிர்வழக்கு தாக்கல் செய்ய வேண்டியது இவ்வழக்கின் தீர்முடிவிற்கு அவசியமாய் உள்ளது என்றும், இல்லாவிடில் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு நேரிடும் என்றும், ஆகையால், மனுதாரர் இத்துடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்**

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லக்கூடியதில்லை என்றும், ஏதோ இந்த 1ம் எதிர்மனுதாரர்/1ம் வாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ரிட் மனு தாக்கல் செய்து மேற்படி ரிட் மனுவில் மனு கோப்புக்கு எடுக்கப்பட்டு அது தள்ளுபடி செய்யப்பட்ட விபரம் தெரிந்திருந்தும் இதுவரை மனுதாரர்/1ம் பிரதிவாதி கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் பல ஆண்டுகளாக இருந்துவிட்டு தற்பொழுது மனுதாரர்/1ம் பிரதிவாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கை விரைவாக விசாரிக்க வேண்டும் என்று மனுதாரர் தரப்பில் மனு தாக்கல் செய்து அந்த மனுவின் அடிப்படையில் வழக்கை விரைந்து விசாரிக்க வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் உத்தரவு பெற்ற பிறகு இந்நீதிமன்றத்தில் தற்பொழுது 1ம் எதிர்மனுதாரர்/1ம் வாதி தரப்பில் முதல் விசாரணை முடிவுற்று தற்பொழுது மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் பல வாய்தாக்கள் வாங்கிய பின்பு தற்பொழுது ஏதோ கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டியுள்ளதால் மேற்படி கூடுதல் எதிர்வழக்குரையை அங்கீகரிக்க வேண்டி மனுதாரர் தரப்பில் தற்பொழுது மனு தாக்கல் செய்துள்ளது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், மனுதாரர்/1ம் பிரதிவாதி வழக்கை இலுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில்

ALIMA M Digitally signed by ALIMA M Date: 2026.06.11 18:34:55 +0530

மனுதாரர்/1ம் பிரதிவாதி செயல்படுகிறார் என்றும், இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பின்பு மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின் கடந்த நான்கு ஆண்டுகளாக எவ்வித நடவடிக்கையும் மனுதாரர் தரப்பில் எடுக்காமல் இருந்துவிட்டு தற்பொழுது மனுதாரர் மனுவை தாக்கல் செய்வது ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், எனவே, மனுதாரரின் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை, அசல் வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) மனுதாரரால் இம்மனுவானது மனுதாரர் இத்துடன் தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை அங்கீகரித்து ஏற்றுக்கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) அசல் வழக்கு கோப்பின் பரிசீலனையில் இருந்து, அசல் வழக்கானது வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக வலியுறுத்துக்கட்டளை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

7) மேலும், இம்மனுவானது அசல் வழக்கில் வாதி தரப்பு சாட்சி வா.சா.1ன் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதையும் இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது.

8) மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில் இவ்வழக்கில் பிராது தபசில் சொத்துக்கள் சம்பந்தமாக எதிர்மனுதாரர்/வாதி கடந்த 2022ம் ஆண்டு இவ்வழக்கிற்கு முன்பு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில், ரிட் மனு தாக்கல் செய்து மேற்படி ரிட் மனுவானது W.P.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:35:07 +0530

(MD)No. 133 of 2022 and W.M.P.(MD) No.97 of 2022 என கோப்புக்கு எடுக்கப்பட்டு கடந்த 06.01.2022 ல் Admission–ல் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, மேற்படி ரிட் மனுவில் மனுதாரர் தரப்பினராக இருந்தபோதும் மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்படாததால் மனுதாரருக்கு மேற்படி உத்தரவு பற்றி தற்சமயம் தான் தெரியவந்தது என்றும், எனவே, மேற்படி உத்தரவு குறித்து கூடுதல் எதிர்வழக்குரை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட வேண்டியது அவசியமாய் உள்ளது என்றும், அதேபோல் மனுதாரர் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே அதாவது கடந்த 25.04.2011 ம் ஆண்டு 2 ம் தபசில் 6 ம் அயிட்ட சொத்தை நாராணபுரம் கிராமத்தை சேர்ந்த முருகன் என்பவருக்கு பதிவு கிரைய ஆவணம் மூலம் கிரையம் செய்து கொடுத்துவிட்டதாகவும், அதேபோல் மனுதாரர் தனக்கு பாத்தியப்பட்ட 2 ம் தபசில் 1 முதல் 5 அயிட்ட சொத்துக்களை மனை பிரிவுகளாக பிரிவினை செய்து ஊராட்சிமன்ற அனுமதி பெற்று மனைபிரிவு மேற்கொள்ளப்பட்டதால் நிபந்தனையின் படி மனுதாரர் மேற்படி மனைபிரிவுகளுக்கு பாதை அமைக்க வேண்டி தமிழக அரசுக்கு மேதகு ஆளுநர் அவர்கள் மூலம் தபசில் புல எண்களில், மனுதாரருக்கு பாத்தியப்பட்ட இடத்தினை கடந்த 02.03.2011 அன்று பதிவு நன்கொடை ஆவணம் பிறப்பித்துக் கொடுத்துள்ளதாகவும், எனவே, மேற்படி விபரங்களை இதற்கு முன்பு மனுதாரருக்கு ஆஜரான வழக்கறிஞரிடம் தெரிவிக்க இயலாமல் போய்விட்டது என்றும், எனவே, மேற்படி விபரங்களை தெரிவித்து கூடுதல் எதிர்வழக்கு தாக்கல் செய்ய வேண்டியது இவ்வழக்கின் தீர்முடிவிற்கு அவசியமாய் உள்ளது என்று கட்சி எடுக்கப்பட்டுள்ளது.

9) இம்மனுவின் 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரர்/1 ம் பிரதிவாதி வழக்கை இலுத்தடிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர்/1 ம் பிரதிவாதி செயல்படுகிறார் என்றும், இந்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த பின்பு மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின் கடந்த நான்கு ஆண்டுகளாக எவ்வித நடவடிக்கையும் மனுதாரர் தரப்பில் எடுக்காமல் இருந்துவிட்டு தற்பொழுது மனுதாரர் மனுவை தாக்கல் செய்வது ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்று ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:35:27 +0530

10) அசல் வழக்கில் மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையை ஏற்றுக்கொள்வதால் அசல் வழக்கின் தன்மையில் எவ்வித மாற்றமும் ஏற்படப்போவதில்லை. அசல் வழக்கின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கும், தரப்பினர்களுக்கு இடையே மேலும் பல வழக்குகள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கும், மனுதாரர் தரப்பு கூடுதல் எதிர்வழக்குரை இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவேண்டியது அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

11) இருப்பினும், மனுதாரர்/1ம் பிரதிவாதி தனது தரப்பு கூடுதல் எதிர்வழக்குரையை மிகவும் காலதாமதமாக வா.சா.1ன் குறுக்கு விசாரணையின்போது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பதால் 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு ஏற்பட்ட கஷ்ட, நஷ்டத்தை கருத்தில் கொண்டு இம்மனுவானது நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

<u>12) இறுதியாக</u>

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 1ம் எதிர்மனுதாரர்/வாதிக்கு நேரடியாக 15.06.2026ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 15.06.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 11ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:35:48 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் </u>:–**

**– இல்லை –**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.06.11 18:35:57 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**சங்கரன்கோவில்.**

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**

I.A.No.09/2026
in
O.S.No.41/2022
**உத்தரவு (Draft / Fair)**

**நாள் : 11.06.2026**